[1989 மே 4

கோரிக்கை எண். 8—தேர்தல்கள்.

[69 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

பேரவைத் தலைவர் அவர்களே,

மானியக் கோரிக்கை எண். 8 தேர்தல்கள் என்பதன் கீழ் 1989-90ஆம் நிதியாண்டின் செலவுகளுக்காக ரூ. 8,30,42,000 அரசுக்கு வழங்க வேண்டுமென்று நான் முன்மொழிகிறேன். இம் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்படும் நிதி பெரும்பாலும் முறையான தேர்தல் அமைப்பில் உள்ள அலுவலர் மற்றும் பணியாளர்களின் சம்பளம், பயணப்படி செலவுகளுக்கும், தேர்தல் நிர்வாகத்தின் சீரான நடைமுறைக்காகவும் வாக்காளர் பட்டியல்கள் சிறப்புத் திருத்தம் மற்றும் இவ்வருடம் எதிர்பார்க்கப்படுகிற நாடாளுமன்றத் தேர்தல்களுக்காகவும் பயன்படுத்தப்படுகிறது.

2. தமிழக சட்டமன்றப் பேரவைக்கு ஒரே நாளில் 21-1-89 அன்று பொதுத் தேர்தல் செவ்வனே நடத்தப்பட்டது. மொத்தம் 42,878 வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டன. இதில் ஆண்களுக்காக 14,404 வாக்குச் சாவடிகளும், பெண்களுக்காக 14,404 வாக்குச் சாவடிகளும், இருபாலரும் வாக்களிக்க 13,817 வாக்குச் சாவடிகளும், நலிந்த பிரிவினருக்காக 253 வாக்குச் சாவடிகளும் ஆக மொத்தம் 42,878 வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டன. கூடுமானவரையில் எந்தவொரு வாக்காளரும் 2 கிலோ மீட்டர் தூரத்திற்கு மேல் நடந்து வந்து வாக்களிக்க வேண்டிய சிரமம் இல்லாதவாறு வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டன. தேர்தல் முடிந்த அடுத்தநாளே வாக்குச் சீட்டுகள் எண்ணப்பட்டு தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டன. வாக்காளர்களுக்கும், தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களுக்கும் விதிகளுக்குட்பட்ட தேவையான வசதிகளும் செய்து தரப்பட்டது.

3. நடப்பு நிதியாண்டில் மக்களவைக்கு தேர்தல் நடைபெற வேண்டும். கடந்த சட்டமன்றப் பேரவை தேர்தலின் போது வாக்காளர்கள் எந்த வாக்குச் சாவடிகளில் வாக்களித்தார்களோ அதே வாக்குச்சாவடிகளில் மக்களவைத் தேர்தலிலும் வாக்களிக்க ஏற்பாடுகள் செய்யப்படும். தற்சமயம் மூன்று நாடாளுமன்றத் தொகுதிகள் அதாவது பொள்ளாச்சி (எஸ்.சி.), மதுரை மற்றும் கரூர் ஆகியவை இம்மாநிலத்தில் காலியாக உள்ளன. 1-4-1989 அன்று 18 வயது நிறைவடைந்தவர்களையும் அதற்கு மேல் வயதானவர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்ப்பதற்கான சிறப்புத் திருத்தம் தற்போது நடைபெற்று வருகிறது. வாக்காளர்கள் இறுதிப் பட்டியல் 15-6-1989 அன்று வெளியிடப்படும்.

1989 மே 4]

4. தமிழக மேல்சபையை நிறுவுவதற்கான தீர்மானம் தமிழக சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்டு, மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேலும் மாநிலங்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட ஆறு உறுப்பினர்களின் பதவிக் காலம் 24-7-1989 அன்று முடிவடைவதால், இந்தக் காலியிடங்களை நிரப்புவதற்கு, மாநிலங்களவைக்கு தேர்தல் ஜூலை மாதம் 24-ந் தேதிக்கு முன்னர் நடைபெறும்.

5. தேர்தல் மானியக் கோரிக்கையைப் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின் சுருக்கத்தை தந்துள்ளேன். இதனை ஏற்று மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1989 மே 4

1989-90 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டம்—கோரிக்கை எண் 8-கொள்கை விளக்கக்குறிப்பு—தேர்தல்கள்.

''மானியக் கோரிக்கை எண். 8—தேர்தல்கள்'' என்பதன்கீழ் 1989-90 ஆம் ஆண்டில் கீழ்குறித்த இனங்களுக்குச் செலவிட தேவைப்படும் தொகை ரூ. 8,30,42,000 (அனுமதிக்கப்பட வேண்டியது) ஆகும்.

2015. தேர்தல்கள் (திட்டத்தில் சேராதது)

	ரூபாய்
102. தேர்தல் அதிகாரிகள்—	
எஎ. சட்டமன்றப் பேரவை நாடாளுமன்றத் தொகுதிகள்	97,96,000
எபி. மேலவைத் தொகுதிகள் ..	11,000
103. வாக்காளர் பட்டியலைத் தயாரித்து அச்சிடுதல்	
எஎ. சட்டமன்றப் பேரவைத் தொகுதிகள்	33,74,000
எசி. மேலவைத் தொகுதிகள்	2,000
104. நாடாளுமன்ற மக்களவைக்கும் மாநிலச் சட்டமன்றப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் தேர்தல்கள் நடைபெறுகையில் அவற்றை நடத்துவதற்கான செலவுகள்	11,86,000
105. நாடாளுமன்றத்துக்குத் தேர்தல்கள் நடத்துவதற்கு ஆகும் செலவுகள் :	
எஎ. இடைத் தேர்தல்கள்	13,000
எபி. நாடாளுமன்ற மக்களவைக்குத் தேர்தல்	6,85,88,000
106. மாநிலச் சட்டமன்றத்திற்குத் தேர்தல்கள் நடத்துவதற்கான செலவுகள் :	
எஎ. மாநிலச் சட்டமன்றப் பேரவை ..	57,000
எபி. சட்டமன்ற மேலவை	15,000
மொத்தம் ..	8,30,42,000

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

1989 மே 4]

2. மேற்சொன்ன இனங்களுக்கான மதிப்பீடுகள், கீழே விளக்கமாகக் கூறப்பட்டுள்ள பல்வேறு இனங்களுக்குச் செலவு செய்யப்படுவதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ளது :

102. தேர்தல் அதிகாரிகள் :

எஎ. சட்டமன்றப் பேரவை நாடாளுமன்றத் தொகுதிகள் :

மதிப்பீடு ரூ. 78,91,000+18,70,000+35,000=97,96,000

தலைமைச் செயலகத்தில், பொதுத் (தேர்தல்கள்) துறைக்குத் தலைமைத் தேர்தல் அதிகாரியும், இணைத் தலைமைத் தேர்தல் அதிகாரியும் (இணைச் செயலாளர்) சார்புச் செயலாளரும் பொறுப்பு வகிக்கின்றனர். அவர்களுக்கு உதவும் பொருட்டு பிரிவு அலுவலர்கள், உதவிப் பிரிவு அலுவலர்கள், இன்னும் மற்ற ஊழியர்களும் நிலையான அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வெளியூர் பகுதிகளில் எல்லா மாவட்ட (சென்னை நீங்கலாக) ஆட்சித் தலைவர்கள் அலுவலகங்கள், வட்டாட்சியர் அலுவலகங்கள், தேர்தல் பதிவு அதிகாரிகளாகப் பொறுப்பு வகிக்கும் வருவாய் கோட்ட அதிகாரிகளின் அலுவலகங்கள், சேலம், திருச்சிராப்பள்ளி நகராட்சிகளின் ஆணையர் அலுவலகங்கள் மற்றும் கோயம்புத்தூர், மதுரை மாநகராட்சிகளின் ஆணையர் அலுவலகங்கள் ஆகியவற்றில் தேர்தல் சம்பந்தப்பட்ட பணிகளைக் கவனிப்பதற்கென நிலையான அடிப்படையில் ஓர் உதவியாளர் நியமிக்கப்பட்டுள்ளார். சென்னை மாநகரைப் பொறுத்தமட்டில் சென்னை மாநகராட்சி ஆணையர் அலுவலகத்தில் வட்டாட்சியர் ஒருவர், உதவியாளர் இருவர், தட்டச்சர் ஒருவர், இளநிலை உதவியாளர் ஒருவர், சிற்றெழுத்தர் ஒருவர், அலுவலக உதவியாளர் ஒருவர் ஆகியோர் நிலையான அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளனர். தற்சமயம் ஓராண்டுக் காலத்துக்கு மட்டும் ஒரு மாவட்ட வருவாய் அலுவலரும் மாநகராட்சி ஆணையருக்கு தேர்தல் பணிகளில் உதவி புரிய நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலே குறிப்பிட்ட நிலையான அலுவலர்கள், ஊழியர்களின் சம்பளச் செலவுகள் தவிர, மாவட்டத் தேர்தல் அதிகாரிகள், தேர்தல் பதிவு அதிகாரிகள், உதவித் தேர்தல் பதிவு அதிகாரிகள் ஆகியோரின் பயணச் செலவுகளும் இத்தலைப்பின் கீழ் அடங்கும். அவர்களின் அலுவலகச் செலவுகள், எதிர்பாராத செலவினங்கள், தபால் தந்தி தொலைபேசிக் கட்டணங்கள், தேர்தல் சார்பாக சிறப்புப்பணிகளுக்காக வழங்கப்படும் ஊதியங்கள் போன்றவையும் இக்கணக்குத் தலைப்பின் கீழ் அடங்கும். மேலும் அகவிலைப்படி, கருணைத் தொகை வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 18,70,000 இந்த உதவி தலைப்பின் கீழ் அடங்கும். இச் செலவினங்களில் ஐம்பது விழுக்காட்டினை மத்திய அரசு பகிர்ந்து கொள்கிறது.

[1989 மே 4

102, தேர்தல் அதிகாரிகள்.
ஏபி. மேலவைத் தொகுதிகள்
மதிப்பீடு ரூ. 11,000.

மேலவைத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்களைத் திருத்தி அமைக்கும் பணிக்காக அவ்வப்போது நியமிக்கப்படும் தற்காலிகப் பணியாளர்களின் சம்பளம் போன்றவை இத்தலைப்பின் கீழ் அடங்கும். மேலவை அமைப்பதற்கான தீர்மானம் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எனவே இத்தலைப்பின்கீழ் அடையாள நிதி ஒதுக்கீடு மட்டுமே செய்யப்பட்டுள்ளது. மாநில அரசே மொத்த செலவினையும் ஏற்றுக்கொள்கிறது.

103. வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்து அச்சிடுதல் :
ஏஏ. சட்டமன்றப் பேரவைத் தொகுதிகள் :
மதிப்பீடு : ரூ. 33,74,000.

இம்மாநிலத்திலுள்ள சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்து அச்சிடுவதற்கான எல்லா விதமான செலவினங்களும் இத்தலைப்பின்கீழ் கணக்கிடப்படும். இப்பணிக்காகத் தற்காலிகமாக நியமிக்கப்படும் அலுவலர்கள், பணியாளர்களின் சம்பளம், எழுதுபொருள், அச்சிடும் செலவுகள் போன்றவையும் இத்தலைப்பின்கீழ் அடங்கும்.

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் 18 வயது பூர்த்தியானவர்களை வாக்காளர் பட்டியலில் சேர்க்கும் சிறப்பு திருத்தத்திற்காக தற்காலிகமாக நியமிக்கப்படும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் ஊதியத்திற்கும், சென்னை ஆவணக்காப்பகத்தில் வாக்காளர் பட்டியல்களை காப்பதற்காக நிலையாக நியமிக்கப்பட்டுள்ள ஓர் உதவியாளர், ஒரு சிற்றெழுத்தர் ஆகியோரின் சம்பளச் செலவுகளுக்காகவும் மேலே குறிப்பிட்ட அளவில் நிதி ஒதுக்கீடு தேவைப்படுகிறது.

தற்போது 1-4-1989-ஐ அடிப்படையாக வைத்து 18 வயது பூர்த்தியான அனைவரையும், வாக்காளர் பட்டியலில் சேர்ப்பதற்கான சிறப்புத்திருத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதன் அட்டவணை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :

(1)	வீடுவீடாகச் சென்று கணக்கு எடுப்பதும் மேற்பார்வை செய்வதும்.	10-2-1989 வெள்ளி முதல் 25-3-1989 சனி வரை.
(2)	திருத்தப்பட்டியல்கள் தயாரித்தலும் அச்சிடுதலும்.	26-3-1989 ஞாயிறு முதல் 26-4-1989 புதன் வரை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1989 மே 4]

(3) வரைவுப்பட்டியல் வெளியிடுதல் (தற்போதுள்ள பட்டியலை திருத்தப் பட்டியலோடு சேர்த்து வெளியிடுதல்).	27-4-1989 வியாழன்.
(4) பட்டியலில் பெயர்களை சேர்ப்பதற்கான மனுக்கள் செய்வதற்கு கால வரையறை.	27-4-1989 வியாழன் முதல் 15-5-1989 திங்கள் வரை.
(5) பெயர்களைச் சேர்ப்பதற்கான மனுக்கள் மற்றும் ஆட்சேபணைகள் மீது முடிவுகள் செய்தல் மற்றும் திருத்தப்பட்டியல்கள் அச்சிடுதல்.	16-5-1989 திங்கள் முதல் 14-6-1989 புதன் வரை.
(6) பட்டியல் இறுதி வெளியீடு	15-6-1989 வியாழன்.

இச்செலவினங்களை மாநில அரசும் மைய அரசும் சரிபாதியாகப் பகிர்ந்து கொள்ளுகின்றன.

103. வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்து அச்சிடுதல் :
ஏசி. மேலவைத் தொகுதிகள் :
மதிப்பீடு : ரூ. 2,000.

மேலவைத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்களை அச்சிடுவதற்கான செலவுகள் மட்டும் இத்தலைப்பின்கீழ் அடங்கும். மேலவை அமைப்பதற்கான தீர்மானம், சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எனவே இத்தலைப்பின்கீழ் அடையாள நிதி ஒதுக்கீடு மட்டுமே செய்யப்பட்டுள்ளது. மாநில அரசே மொத்த செலவினையும் ஏற்றுக்கொள்ளுகிறது.

104. நாடாளுமன்ற மக்களவைக்கும், மாநில சட்டமன்றப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் தேர்தல்கள் நடைபெறுகையில் இவற்றை நடத்துவதற்கான செலவுகள் மதிப்பீடு ரூ. 11,86,000.

நாடாளுமன்றத்திற்கும், சட்டமன்றப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் தேர்தல்கள் நடைபெறும்போது ஏற்படும் செலவினங்கள் அனைத்தும் இதன்கீழ் அடங்கும். 1984-ம் ஆண்டில்தான் நாடாளுமன்றத்திற்கும் தமிழ்நாடு சட்டப்பேரவைக்கும் ஒரே சமயத்தில் பொதுத் தேர்தல்கள் நடைபெற்றன. மாவட்டங்களில் வாக்குப் பெட்டிகள் வைக்கப்பட்டுள்ள தனியார் கட்டிடங்களுக்கான வாடகை, அதற்கான காவலர்களின் சம்பளம், வாக்குப்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பெட்டிகளைப் பராமரிக்கும் செலவுகள், பொதுத்(தேர்தல்) துறையில் உள்ள மோட்டார் வாகனங்களின் பராமரிப்பு, பெட்ரோல் செலவுகள் போன்ற ஆண்டுதோறும் ஏற்படக்கூடிய செலவினங்கள் இதன்கீழ் அடங்கும். மேலும் வருகின்ற பாராளுமன்ற பொதுத் தேர்தல்களின் போது வாங்கப்பட இருக்கும் வாக்குப் பெட்டிகளின் செலவினமும் இதில் சேர்க்கப்பட்டுள்ளது. இதற்கான செலவினங்களுக்காக இத்தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இச்செலவினங்களில் ஐம்பது விழுக்காட்டினை மத்திய அரசு பகிர்ந்து கொள்கிறது.

105. நாடாளுமன்றத் தேர்தல்கள் நடத்துவதற்கான செலவுகள் :
ஏஏ. இடைத் தேர்தல்கள் :
மதிப்பீடு : ரூ. 13,000.

நாடாளுமன்றத் தொகுதிகளில் இடைத்தேர்தல்கள் நடைபெற்றால், அதற்காகும் அனைத்துச் செலவினங்களும் இத்தலைப்பின்கீழ் அடங்கும். தற்சமயம் மூன்று நாடாளுமன்றத் தொகுதிகள் அதாவது பொள்ளாச்சி (எஸ்.சி), கரூர் மற்றும் மதுரை ஆகியவை இம்மாநிலத்தில் காலியாக உள்ளன. ஆனால் பாராளுமன்றத்திற்கான பொதுத் தேர்தல் இவ்வாண்டு இறுதியில் நடைபெற உள்ளதால் இக்காலியிடங்களை பூர்த்தி செய்வதற்கான வாய்ப்புகள் ஏதும் தென்படவில்லை. இவற்றிற்காக இத்தலைப்பின்கீழ் வெறும் அடையாள நிதி ஒதுக்டு மட்டுமே செய்யப்பட்டுள்ளது. இச்செலவினங்கள் முழுவதையும் மத்திய அரசு ஏற்றுக்கொள்ளுகிறது.

105. நாடாளுமன்றத் தேர்தல்கள் நடத்துவதற்கான செலவுகள் :
எபி. நாடாளுமன்றத் தேர்தல்கள் :
மதிப்பீடு : ரூ. 6,85,88,000.

நாடாளுமன்றத்திற்குத் தனியே பொதுத் தேர்தல்கள் நடைபெறும்போது அதற்கான செலவினங்கள் எல்லாம் முதலில் இத்தலைப்பின்கீழ் பதியப்பெற்று பின்னர் மைய அரசினரால் திருப்பித் தரப்படும்.

1984 டிசம்பர் திங்களில் நாடாளுமன்றத்திற்கும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் பொதுத் தேர்தல்கள் நடைபெற்றன. தமிழக சட்டமன்றப் பேரவைக்கு 1989 சனவரியில் பொதுத் தேர்தல் நடைபெற்றது. எனவே பாராளுமன்றத்திற்கான பொதுத்தேர்தல் இவ்வாண்டு இறுதியில் அதாவது டிசம்பர் மாதத்தில் நடைபெற உள்ளது. எனவே இதற்காக தற்காலிகமாக அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள்

1989 மே 4]

ஊதியங்களையும் வாக்குச் சீட்டுகள் அச்சிடவும் மற்றும் இதர பொருட்களை வாங்குவதற்காகவும். மேற்குறிப்பிட்ட ஒதுக்கீடு தேவைப்படுகிறது.

இச்செலவினங்கள் அனைத்தையும் மத்திய அரசே மேற்கொள்ளுகிறது.

106. மாநில சட்டமன்றத் தேர்தல்கள் நடத்துவதற்கான செலவுகள் :

எஎ. மாநிலச் சட்டமன்றப் பேரவை :

மதிப்பீடு : ரூ. 57,000.

தனியாக மாநிலச் சட்டமன்றப் பேரவைக்குப் பொதுத் தேர்தலோ இடைத்தேர்தலோ நடைபெற்றால் அதன் தொடர்பான செலவினங்கள் இதன் கீழ் அடங்கும்.

1989 சனவரி திங்களில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு பொதுத்தேர்தல்கள் நடைபெற்றன. 1989-90-ல்பொதுத்தேர்தல்கள்துறையின் தலைமைச் செயலகத் துறைகளின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் ப்ளெயின் பேப்பர் காப்பியர்கள் இரண்டு வாங்கப்பட்டு உபயோகத்தில் உள்ளது. இவற்றிற்கான காகிதம் மற்றும் இதர பொருட்கள் வாங்குவதற்காக இத்தலைப் பின்கீழ் மேற்கண்ட நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

இச்செலவினங்கள் அனைத்தையும் மாநில அரசே மேற்கொள்ளுகிறது.

106. மாநில சட்டமன்றத் தேர்தல்கள் நடத்துவதற்கான செலவுகள் :

எபி. சட்டமன்ற மேலவை :

மதிப்பீடு: ரூ. 15,000.

மேலவை தொகுதிகளுக்கு தேர்தல் நடக்கும்போது அதற்கான செலவினங்கள் அனைத்தும் இத்தலைப்பின்கீழ் கணக்கிடப்படுகின்றன.

மேலவை அமைப்பதற்கான தீர்மானம் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எனவே இத்தலைப்பின்கீழ் அடையாள நிதி ஒதுக்கீடு மட்டுமே செய்யப்பட்டுள்ளது.

மேலும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களால் மாநிலங்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட ஆறு உறுப்பினர்களின் பதவிக்காலம் 24-7-1989 அன்று முடிவடைகிறது. மாநிலங்களைவைக்கு தேர்தல் 24-7-1989 தேதிக்கு முன்னர் நடைபெறும்.

மாநில அரசே இதன் மொத்தச் செலவுகளையும் ஏற்றுக் கொள்ளுகிறது.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்